# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.8 (L.W.6 )
## SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. M. Jeevarathinam |
| Father Name | : | Thiru. Munusamy |
| Occupation | : | |
| Taluk | : | Valayampatti Village, Vaniyambadi Taluk, Tirupathur Dt. |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.12.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:_**

**முதல் விசாரணை–**

நான் தற்பொழுது வாணியம்பாடி நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 23.1.2006 வேலூர் ஆயுதப்படையில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்பொழுது வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த தகவல் படி உதவி ஆய்வாளர் சீனிவாசன் அவர்களுடன் 10 காவலர்கள் உடன் வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அறிக்கை செய்தோம். அங்கு DSP சரவணன், அவருடன் கிராம காவல் நிலைய வேலூர் உதவி ஆய்வாளர் புகழ் மற்றும் விரிஞ்சிபுரம் உதவி ஆய்வாளர், ஹரிதாஸ் அவர்களுடன் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் சுமார் மாலை 4.00 மணிக்கு அறிக்கை செய்தோம். அங்கு DSP சரவணன் எங்களுக்கு மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக செல்வதற்கு அறிவுரை கூறினார். மாலை 4.45 மணிக்கு மதுவிலக்கு வேட்டைக்காக கயிலாய மலை திப்பையிடம் சென்றோம். அங்கு சாராயம் விற்றுக்கொண்டிருந்தவரிடத்தில் 2 , 3 பேர் குடித்துக் கொண்டிருந்தனர். சீருடையில் இருந்த எங்களை கண்டதும் ஓடிவிட்டனர். சாராயம் விற்றுக்கொண்டிருந்த 4 பேர் மட்டும் எங்களை கல் எடுத்து வீசினர். மணி

என்கிற நடு பையன் மற்றும் முனிரத்தினம் ஆகியோர் ஆஜரில் உள்ளார். இருவர் ஆஜர், அப்போது சடையன் என்பவர் RSI சீனிவாசனை நோக்கி நாட்டுத் துப்பாக்கியால் சுட்டார். அவர் பாறைக்கு கீழே மறைந்து கொண்டார். நானும், Gr–I 551 சுரேஷ்பாபு ஆகியோரும் சடையனை பிடித்து கொண்டோம். அப்போது, மணி என்ற நடுபையன் DSP சரவணனை நோக்கி துப்பாக்கியால் சுட குறி வைத்தார். அப்போது, DSP சரவணன் துப்பாக்கியை கீழே போடு, சரணடைந்துவிடு என்று சத்தமாக எச்சரித்தார். அவர் துப்பாக்கியை போடவில்லை. DSP சரவணன் தன்னை காப்பாற்றி கொள்ளவும், கூட வந்த காவலர்களை காப்பாற்றி கொள்ளவும், தற்காப்புக்காக மணி என்ற நடுபையனை துப்பாக்கியால் சுட்டார். மணிக்கு வலது காலில் அடிப்பட்டு கீழே விழுந்தார். அவரை போய் பிடித்து கொண்டு வந்து DSP யிடம் ஆஜர் செய்தேன். வெங்கடேசன் என்பவரை 1066 குகன், ராஜமூர்த்தி, அந்தோணிராஜ் பிடிக்க சென்றபோது, வெங்கடேசன் என்பவர் அசிங்கமாக தேவியா பையா என்னை பிடிக்க வந்தியா என்று அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த கத்தியால் வலது கை புஜத்தில் வெட்டினார், இடது கையில் வெட்டினார், காயம் ஏற்பட்டது, நீதிமன்றத்தில் உள்ள கத்தியால் தான் வெட்டினார், அந்த கத்தி சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ராஜமூர்த்தி மற்றும் குகன் ஆகியோர் வெங்கடேசனை பிடித்து DSP யிடம் ஆஜர் செய்தனர். முனிரத்தினம் கல்லால் வீசினார். அவனை பிடித்து DSP யிடம் ஆஜர் செய்தோம். பிறகு நாட்டுத் துப்பாக்கி – 2, நீதிமன்றத்தில் இருந்த துப்பாக்கிதான் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ஏற்கெனவே சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டுச் சாராயம் சுமார் 100 லிட்டர் சாராயம் மற்றும் சாராய பாக்கெட்டுகளையும், பணம் ரூ.150 கைப்பற்றிக்கொண்டு எதிரிகள் நால்வரையும் ஏற்றிக்கொண்டு, காயம்பட்ட மணியையும், காவல் அந்தோணிராஜையும், RSI சீனிவாசனையும் வேலூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்தனர். RSI சீனிவாசனை தேவிடியா பசங்களே, எங்கள் பொழப்பை கெடுக்க வந்தீங்களே சுட்டு காலி பண்றோம் உங்களை என்று சடையன்

துப்பாக்கியால் சுட்டார். எதிரி சடையன் கணிணி வழியாக வேலூர் சிறைச்சாலையில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார். சாட்சி சரி என்று அடையாளம் காண்பித்தார். 4 எதிரிகளில் இவர் ஒருவர், இவர் சடையன் என்று அடையாளம் காட்டினார். இது சம்மந்தமாக DCRB DCB பார்த்தசாரதி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகவில்லை. எனவே குறுக்கு விசாரணை தற்போது இல்லை.

**விசாரணை முடிந்த நேரம்: 1.30 p.m.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.12.15 18:31:59 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்